**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி 26.03.2025** **நேரம் மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

நாடு முழுவதிலும், 1 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குச் சாவடி நிலை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கான, நாட்டின் முதலாவது திட்டத்தை தேர்தல் ஆணையம், இன்று தொடக்கி உள்ளது.

புதுச்சேரியில், மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் சார்பில், இன்று நடைபெற்ற, HIV-AIDS பற்றிய திறன் மேம்பாட்டு பயிலரங்கை, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் தொடக்கி வைத்தார்.

புதுச்சேரி மற்றும் உழவர்கரை நகராட்சிகளை இணைத்து, புதுச்சேரி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும் என முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் வெளியிடும் கோரிக்கைகளை ஏற்று செயல்பட, புதுச்சேரி அரசு தயாராக இருப்பதாக, முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.

-------------------------

தேர்தல் ஆணையம் 1 (10)

தேர்தல் ஆணையம், நாடு முழுவதிலும் உள்ள 1 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குச் சாவடி நிலை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கான, நாட்டின் முதலாவது திட்டத்தை இன்று தொடக்கி உள்ளது. புதுடெல்லியில், தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார், தேர்தல் ஆணையர் டாக்டர் விவேக் ஜோஷி ஆகியோர் இன்று தொடக்கி வைத்த 2 நாள் பயிற்சி முகாமில், பீகார், மேற்குவங்கம் மற்றும் அசாமைச் சேர்ந்த, நூற்றுக்கும் மேற்பட்ட வாக்குச் சாவடி நிலை அதிகாரிகளும், புதுச்சேரி, கேரளா உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த வாக்காளர் பதிவு அதிகாரிகள் மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரிகளும் பங்கேற்றுள்ளனர். இது குறித்து கூடுதல் விவரங்கள்...

தேர்தல் ஆணையம் 2 (13)

இந்தியாவில், உலகிலேயே மிகப் பெரிய அளவிலான தேர்தல்களை வெற்றிகரமாக நடத்த, தேர்தல் ஆணையம், 10 லட்சத்து 50 ஆயிரம் வாக்குச் சாவடிகளை அமைப்பதாக, தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார், புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். அடுத்த சில ஆண்டுகளில், தேர்தல் ஆணையத்தால் நடத்தப்பட உள்ள பயிற்சி முகாம்களில், சராசரியாக, பத்துக்கு ஒரு வாக்குச் சாவடியைச் சேர்ந்த, வாக்குச் சாவடி நிலை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும் என, தேர்தல் ஆணையம், அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. இவ்வாறு பயிற்சி பெறும் அதிகாரிகள், மாஸ்டர் பயிற்றுநர்களாக செயல்பட்டு, அனைத்து வாக்குச் சாவடி நிலை அதிகாரிகளுக்கும், பயிற்சி அளிக்க உள்ளனர். தேர்தல் நடைபெற உள்ள மாநிலங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், கட்டம்-கட்டமான முறையில், இப்பயிற்சி வழங்கப்படும் என்றும், தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

-------------------------

*மன் கீ பாத்* (8)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும், 120 ஆவது மன் கீ பாத் நிகழ்ச்சி, ஆகாஷ்வாணியில் வரும் 30 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டிய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை. பொது மக்கள் வரும் 28-ஆம் தேதி வரை, 1800 11-7800 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் வாயிலாகவோ, அல்லது நமோ செயலி மற்றும் மை-கவ் இணையதளம் மூலமாகவோ தெரிவிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

-------------------------

*ரிசர்வ்* (10)

நிதி ஒழுங்குமுறை அமைப்புகள், அனைவரையும் உள்ளடக்கிய நிதிக் கட்டமைப்பை ஆழப்படுத்தும் முயற்சிகளுக்கு, தற்செயலான விதத்தில் கூட தடை போடக் கூடாது என்று, ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா கூறியுள்ளார். தனியார் துறையினருடன் ஒருங்கிணைந்து செயல்படுவது குறித்து, நிதி செயல்பாட்டுப் பணிக்குழுவின் சார்பில், மும்பையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், இந்தியாவில் தற்போது, வயது வந்த நபர்களில் 94 சதவிகிதம் பேர், வங்கிக் கணக்கு வைத்து இருப்பதாகவும், வாடிக்கையாளர் என்ற முறையில்,

இவர்களுக்கு உள்ள உரிமைகளை பாதிக்காத விதத்தில், ஒழுங்குமுறை விதிகள் அமைதல் அவசியம் என்றும் கூறினார்.

-------------------------

*புதுச்சேரி எய்ட்ஸ்* 1 (12)

புதுச்சேரியில், மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் சார்பில், இன்று நடைபெற்ற, HIV-AIDS பற்றிய திறன் மேம்பாட்டு பயிலரங்கை, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் தொடக்கி வைத்தார். கல்லூரி முதல்வர்கள், செந்நாடா மன்ற ஒருங்கிணைப்பாளர்கள், மற்றும், கல்லூரி மாணவர்கள் இதில் கலந்து கொண்டு பயன் பெற்றனர். துவக்க விழாவில் துணை நிலை ஆளுநர் பேசுகையில், 2047ஆம் ஆண்டிற்குள், முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதற்கான பிரதமர் திரு. நரேந்திர மோடியின் இலக்கை எட்டுவதில், கல்வி, சுகாதாரம், உள்கட்டமைப்பு ஆகிய துறைகளின் வளர்ச்சி முக்கியமாக உள்ள நிலையில், HIV போன்ற பிரச்சனைகளால், இதில் தடை ஏற்படுவதால், குறிப்பாக கிராமப்புறங்களில், HIV-AIDS குறித்து நிலவும் மூட நம்பிக்கைகளை போக்கி, விழிப்புணர்வு ஏற்படுத்ததல் அவசியம் என்றார். அவர் மேலும் கூறுகையில்....

*புதுச்சேரி எய்ட்ஸ்* 2 (4)

எய்ட்ஸ் விழிப்பணர்வு பயிலரங்கின் துவக்க விழாவில், சுகாதாரத் துறைச் செயலர் திரு. ஜெயந்த குமார் ரே, புதுடெல்லி தேசிய AIDS கட்டுப்பாட்டு அமைப்பின் துணைத் தலைமை இயக்குநர் டாக்டர் அனூப் குமார் புரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

-------------------------

*ரங்கசாமி-பேட்டி* (6)

புதுச்சேரி மற்றும் உழவர்கரை நகராட்சிகளை இணைத்து, புதுச்சேரி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும் என முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார். இன்று சட்டப் பேரவை வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆஷா பணியாளர்கள், NRHM செவிலியர்கள், மற்றும், அங்கன்வாடி ஒப்பந்த ஊழியர்களின் ஊதியம் உயர்த்தி வழங்கப்படும் என்றும் அறிவித்தார். முதலமைச்சரின் பேட்டியில் இருந்து சில பகுதிகள்.....

*ரங்கசாமி-பதில் உரை (11)*

சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் வெளியிடும் கோரிக்கைகளை ஏற்று செயல்பட, புதுச்சேரி அரசு தயாராக இருப்பதாக, முதலமைச்சர் திரு.

ரங்கசாமி கூறியுள்ளார். இன்று அவையில் பல்வேறு துறைகளின் மானிய கோரிக்கைகள் மீதான விவாதங்களுக்கு பதில் அளித்த அவர், நிர்வாக சீர்திருத்தங்களை கொண்டு வர, அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும், சட்டமன்றத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை பேரவைத் தலைவர் மேற்கொண்டு வருவதாகவும் கூறினார். சுகாதாரத் துறையில், ஆம்புலன்ஸ் ஓட்டுனர் பணியிடங்கள் உட்பட, காலியாக உள்ள பணியிடங்கள் நிரப்பப்படும் என்றும், லிங்காரெட்டிபாளையம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை, தனியார் பங்களிப்புடன் மீண்டும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

------------------------

*நமச்சிவாயம்* (15)

முன்னதாக, மாநில உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம் தமது துறைகளுக்கான மானியக் கோரிக்கை விவாதங்களுக்கு பதில் அளிக்கையில் புதுச்சேரியில் பல்கலைக் கழகத்திலும், பாரதிதாசன் மகளிர் கல்லூரி உட்பட, அனைத்து நகர்ப்புற மற்றும் கிராமப்புற கல்லூரிகளிலும் பயிலக் கூடிய மாணவ-மாணவிகளுக்கு இலவச பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என, அறிவித்தார். அரசுக் கல்லூரிகளில் விரிவுரையாளர் மற்றும் அலுவலர் பணியிடங்கள் நிரப்பப்படும் என்றும், சென்டாக் விண்ணப்பதாரர்களுக்கு கட்டண விலக்கு அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பெண் குழந்தைகள் தங்களின் குறைகளை தெரிவிக்க 500 பள்ளிகளில் புகார் பெட்டி, அரசுப் பள்ளிகளில் போலீஸ் கேடட் திட்டம், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 180 பட்டதாரி ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணை உட்பட பல்வேறு அறிவிப்புகளையும் அமைச்சர் திரு. நமச்சிவாயம் வெளியிட்டார்.

------------------------

*லட்சுமி நாராயணன்* (8)

ராஜீவ்காந்தி சிலை முதல், இந்திராகாந்தி சிலை வரை மேம்பாலம் அமைத்து, மரப்பாலத்தில் இருந்து முள்ளோடை வரை, கடலூர் தேசிய நெடுஞ்சாலையை அகலப்படுத்தி, மேம்படுத்தும் பணிகளை, ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ள, மத்திய அரசிடம் கொள்கை அளவில் ஒப்புதல் பெறப் பட்டுள்ளதாக, மாநில பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன் தமது பதில் உரையில் கூறினார். பொதுப் பணித்துறை

மூலம் மேற்கொள்ளப்பட உள்ள பல்வேறு சாலை மேம்பாட்டுப் பணிகள் மற்றும் கட்டிடப் பணிகள் பற்றிய விவரங்களையும் அவர் வெளியிட்டார்.

-------------------------

*ஈமச் சடங்கு* (5)

புதுச்சேரியில் 5 முதல் 18 வயது வரை உள்ள குழந்தைகள் உயிரிழந்தால், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை மூலம் 15 ஆயிரம் ரூபாய் ஈமச் சடங்கு உதவி வழங்கப்படும் என, அரசு அறிவித்துள்ளது. இந்த கூடுதல் பட்ஜெட் அறிவிப்பை, அமைச்சர் திரு. ஜெயக்குமார் இன்று சட்டப் பேரவையில் வெளியிட்டார்.

-------------------------

*கிரிக்கெட்* (4)

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு குவஹாத்தியில் நடைபெறும் போட்டியில், கொல்கத்தா - ராஜஸ்தான் அணிகள் மோதுகின்றன. அகமதாபாத்தில் நேற்று இரவு நடைபெற்ற போட்டியில், பஞ்சாப் அணி 11 ரன் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

-------------------------

*கேலோ இண்டியா* (6)

புதுடெல்லியில் நடைபெறும் கேலோ இண்டியா பாரா விளையாட்டுப் போட்டிகளின் 7ஆம் நாளான இன்று நடைபெற்ற, உயரடுக்கு வீரர்களுக்கான பளு தூக்கும் போட்டிகளில், தினேஷ் பாகடே, 107 கிலே எடைப் பிரிவிலும், அருண்மொழி அருணகிரி, 86 கிலோ எடைப் பிரிவிலும் தங்கம் வென்றனர். பாரா டேபிள் டென்னிஸ் பிரிவில், காஜல் மக்வானா, அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறி உள்ளார்.

-------------------------

*கேமிங்* (10)

இந்திய சைபர் கிரைம் ஒருங்கிணைப்பு மையம் வழங்கிய அறிக்கைகளின் அடிப்படையில், மத்திய அரசு, ஐடி இடைநிலையாளர் விதிமுறைகளின் கீழ், ஆயிரத்து 410 கேமிங் வலைதளங்களை தடை செய்து இருப்பதாக, மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு.அஷ்வினி வைஷ்ணவ், இன்று மக்களவையில் தெரிவித்தார். கேள்வி நேரத்தில் துணைக் கேள்விகளுக்கு பதில் அளித்த அவர், சூதாட்டம் மற்றும் பணைய விளையாட்டுகளை கட்டுப்படுத்தும் அதிகாரம் மாநிலப் பட்டியலில் இருப்பதாகவும், இதற்கான சட்டக் கட்டமைப்பை மாநில அரசுகள்தான் உருவாக்க வேண்டும் என்றாலும், மத்திய அரசு இதுதொடர்பாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து இருப்பதாக கூறினார்.

-------------------------

*தத்தெடுப்பு (10)*

கடந்த 2023-24ஆம் ஆண்டில், நாடு முழுவதும் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் தத்தெடுக்கப் பட்டதாக, மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் திருமதி சாவித்ரி தாக்கூர் இன்று மாநிலங்களவையில், எழுத்து மூலமான பதில் ஒன்றில் தெரிவித்தார். சிறப்பு தேவை உள்ள 307 குழந்தைகளும் இதில் அடங்குவார்கள் என்று அவர் கூறினார். நாட்டில் மொத்தம் 4 ஆயிரத்து 364 குழந்தைககள், குழந்தை பராமரிப்பு இல்லங்களில் இருப்பதாகவும், வாத்சல்யா இயக்கத்தின் மூலம், இவர்களுக்கு தேவையான கல்வி, திறன் மேம்பாடு, ஆலோசனை மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

-------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

நாடு முழுவதிலும், 1 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குச் சாவடி நிலை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கான, நாட்டின் முதலாவது திட்டத்தை தேர்தல் ஆணையம், இன்று தொடக்கி உள்ளது.

புதுச்சேரியில், மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் சார்பில், இன்று நடைபெற்ற, HIV-AIDS பற்றிய திறன் மேம்பாட்டு பயிலரங்கை, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் தொடக்கி வைத்தார்.

புதுச்சேரி மற்றும் உழவர்கரை நகராட்சிகளை இணைத்து, புதுச்சேரி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும் என முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் வெளியிடும் கோரிக்கைகளை ஏற்று செயல்பட, புதுச்சேரி அரசு தயாராக இருப்பதாக, முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.